

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (13.08.2025) சென்னை. செனாய்நகர், பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இருந்து 2025–26 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசி திட்டம் 7 மாவட்டங்களுக்கு விரிவாக்கம் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார். மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌசிக், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மரு.சித்ரா, நிலைக் குழுத் தலைவர் (சுகாதாரம்) மரு.கோ.சாந்தகுமாரி. இணை இயக்குநர் மரு.வினய், மாநகர நல அலுவலர் மரு.ஜெகதீசன், மண்டலக் குழுத் தலைவர் கூ.பி. ஜெயின், மாமன்ற உறுப்பினர் திரு.மெட்டில்டா கோவிந்தராஜ் மற்றும் மருத்துவர்கள், ஆசிரியர்கள், பள்ளி மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் இளைஞரணி சார்பில் திருநின்றவூர் ஜெயா கலை அறிவியல் கல்லூரியில் கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியும் முரசொலி நாளிதழும் இணைந்து நடத்திய கலைஞர் மாணவ பத்திரிகையாளர் திட்டத்தில் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கின்ற வகையில் விண்ணப்பம் படிவத்தை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் ஏற்பாட்டில் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் வழங்கி கல்லூரியில் உள்ள அறிவிப்பு பலகையில் படிவத்தை ஓட்டினார். உடன் கல்லூரி முதல்வர் சுரேஷ், நகர செயலாளர் தி.வை.இரவி, ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், நிர்வாகிகள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமா மகேஸ்வரன், அக்னி ராஜேஷ், ஏ. டி.பிரியாகுமார், எஸ்.சதீஷ் குமார், புவனேஷ், மோதீஸ் ஜீத்து, ரீத்தீஸ், உள்பட பலர் உள்ளனர்.

## வாக்காளர் பட்டியலில்

# வட மாநிலத் தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனரா என்பதைக் கவனிப்பீர்!

### சாலவாக்கம் பாக முகவர்கள் கூட்டத்தில் – க. சுந்தர் எம்.எல்.ஏ. பேச்சு!

காஞ்சிபுரம், ஆக. 13 - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள சாலவாக்கம் ஒன்றிய திமுக சார்பில் 2026 சட்டமன்ற தேர்தலையொட்டி பாகா முகவர்கள் பயிற்சி பாசறை கூட்டங்கள் சட்டத்துறை சார்பில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ தலைமை தாங்கினார்.

தொகுதி பொறுப்பாளர் சுகுமார், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய செயலாளர் டி. குமார் அனைவரையும் வரவேற்றார்.

இக்கூட்டங்களில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் சு

க. சுந்தர் எம் எல் ஏ கலந்து கொண்டு கூட்டங்களில் பேசுகையில் வாக்காளர் பட்டியலை சரி பார்க்க வேண்டும். திமுக கட்சி நிர்வாகிகளின் பெயர்கள் உள்ளதா மாற்று கட்சியினர். பெயரும் முறையாக உள்ளதா வடமாநில தொழிலாளர்கள் பெயர்கள் ஏதேனும் சேர்க்கப்பட்டுள்ளதா திமுக கட்சியினரின் நிர்வாகிகள் பெயரை நீக்கப் பட்டுள்ளது என்று சரி பார்க்க வேண்டும் மேலும் இறந்தவர்களின் பெயர்களை உடனடியாக வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் வாக்காளர் பட்டியலில் குளறுபடிகள் இருந்தால் தேர்தல் அலுவலரிடம் புகார் அளிக்க வேண்டும், ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை விரைவு படுத்த வேண்டும் 40% வாக்காளர்களை திமுகவில் இணைக்க வேண்டும் கடந்த சட்டமன்றத் தேர்தலில் இந்த உத்திரமேரூர் தொகுதி வெற்றி பெற்றதை போல் இந்த முறையும் வெற்றி பெற உழைக்க வேண்டும்

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் நிர்வாகிகள் சுகுமார், ரவி, பாலமுருகன், பாண்டியன், பாபுஷெரீப், மணி, ரத்தினமாலா,கார்த்திகேயன், முரளிதரன், அண்ணாதுரை, நந்தா, அப்பாதுரை, நடராஜ், உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர். கூட்டத்தின் இறுதியாக ஊராட்சி செயலர் வெங்கடேசன் நன்றி கூறினார்



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி சாலவாக்கம் ஒன்றியத்தில் திமுக சார்பில் பாக தொழில்நுட்ப முகவர்கள் மற்றும் கிளை மற்றும் வார்டு செயலாளர்களுக்கு ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை மற்றும் 2026 சட்டமன்ற தேர்தல் தொடர்பாக கலந்தாய்வு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் சுந்தர் எம்எல்ஏ கலந்துகொண்டு பேசினார் அருகில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கண்ணன் ஒன்றிய செயலாளர் டி. குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண் 15க்குட்பட்ட மலகனந்தபுரம் குளத்து மேடு மயான தெரு ஆகிய பகுதிகளில் ரூபாய் 38 லட்சம் மதிப்பீட்டில் மழை நீர் கால்வாய் அமைக்கும் பணிகளை மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார். அப்பொழுது மண்டல தலைவர் பகுதிகழகச் செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை மாமன்ற உறுப்பினர் டி.வி. ராஜா மாநகராட்சி அதிகாரிகள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் , பல்லாவரம் வடக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கௌதம், வட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் புழல் ஒன்றிய இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா நலத்திட்ட உதவிகள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் 10.8.2025 அன்று தீர்த்தகரையம்பட்டு திமுக அலுவலகம் அருகில் புழல் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் செ.யுவராஜ் ஏற்பாட்டில், புழல் ஒன்றிய பொறுப்பாளர் ச.அற்புதராஜ் தலைமையில், சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் திருவொற்றியூர் ஆர்.டி மதன்குமார் முன்னிலையில் நடைபெற்றது. இதில் ஜி.கே.இனியன், ஏ.டேவிட் நாவலன், யூ.பிரேம்குமார், ஆர்.ஐயப்பன், ம.குரளரசன், அ.மணிமாறன், சே.அஸ்வின் ஆகியோர் வரவேற்புரையாற்றினர். இதில் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. நல உதவிகளை வழங்கினார். தலைமை கழக பேச்சாளர் எஸ்.கே.ஸ்ரீராம், இளம் பேச்சாளர் கா.ஹேமநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

## திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி

# திருப்பத்தூர் நகராட்சியில் புதிய குடிநீர் விநியோக திட்டப்பணி!

### அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திருப்பத்தூர் ஆக.14- திருப்பத்தூர் சட்டமன்றத்தொகுதி திருப்பத்தூர் நகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட 5 வார்டுகளுக்கு கூட்டுக்குடிநீர் திட்டத்தின் வாயிலாக குடிநீர் வினியோகம் செய்திட அப்பகுதி மக்கள் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி அவர்களிடம் தொடர்ந்து கோரிக்கை வைத்து வந்தனர். கடந்த ஆட்சிகாலத்தில் சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்தும், கோரிக்கை கடிதம் வழங்கியும் கடந்த ஆட்சியாளர்கள் செவிசாய்க்கவில்லை தொடர்ந்து எல்லோர்க்கும் எல்லாம் வழங்கும் கழக ஆட்சியில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பொதுப்பணி நெடுஞ்சாலைத்துறை அமைச்சர், நகர்புறவளர்ச்சித்துறை அமைச்சர் ஆகியோரை சந்தித்து இப்பணிக்கு ஆவண செய்ய கோரிக்கை வைத்தார்கள் அதன் பலனாக,

காந்திநகர் பகுதியில் 3லிட்டர் இலட்சம் கொள்ளளவு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதி1ல் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு, மருத்துவர்நகரில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு, வள்ளுவர்நகரில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு, திருமால் நகர் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு, வெங்கடேஷ்வரா நகர் பகுதியில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 6 புதிய மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் குடிநீர் விநியோக பைப்லைன்கள் 10.46 கோடி மதிப்பீட்டில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் அமைத்திட நிதி ஒதுக்கீடு செய்து பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி வார்டுகள் 29,33,31,15,36 ஆகிய ஐந்து வார்டுகளில் உள்ள 20,000த்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெறும் இதை மேம்பாட்டு பணிகளை அ.நல்ல தம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர் சு.ராசேந்திரன், சேர்மென் சங்கீதாவெங்கடேசன், துணைசேர்மென். சபியுல்லா, முன்னாள் நகர மன்ற தலைவர் சு.அரசு, டி.ரகுநாதன், கே.பி.ஆர். ஜோதி ராஜன், டி.கே. மோகன், பி.வி. பிரேம் குமார், வார்டு கவுன்சிலர்கள் சத்யாராஜசேகர், எஸ். கோபிநாத், ச.மனோகரன், ஜீவிதாபார்த்தீபன், மு.வெற்றிக்கொண்டான், உள்ளிட்ட கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நீண்ட நெடுநாள் கோரிக்கையை நிறைவேற்றிய கழக அரசிற்கும் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு அந்தந்த பகுதி மக்கள் மகிழ்வோடு நன்றி பாராட்டினார்கள்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி, பல்லாவரம் பகுதியில் உள்ள மறைமலை அடிகளார் மேல்நிலைப் பள்ளியில் தேசிய குடற்புழு நீக்க நாளினை முன்னிட்டு மாணவ மாணவியர்களுக்கு குடற்புழு நீக்கும் அல்பெண்டசோல் மாத்திரைகளை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ கலந்துகொண்டு மாணவ மாணவிகளுடன் இணைந்து குடற்புழு தொற்றை குறைத்து வளமான எதிர்காலத்திற்கு வித்திடுவோம் என்று உறுதி மொழியை ஏற்று பின்னர் 1300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு அல்பெண்டசோல் மாத்திரைகளை வழங்கினார். இந்நிகழ்வில் மண்டல தலைவர் பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை, மாநகராட்சி சுகாதார பிரிவு அதிகாரிகள், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர், மாமன்ற உறுப்பினர்கள் மங்கையர் திலகம் ராஜ்குமார் ச. சிவக்குமார் கோ. ஜானகிராமன் பி. பரமசிவம் ஆசிரியர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

## தி.மு.க. வர்த்தகர் அணி

### மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

**தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. அணியின் **விழுப்புரம் மத்திய** மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விழுப்புரம் மத்திய மாவட்டம்**

தலைவர் - எம்.எல்.டி. சங்கர் 12ஈ, நடுத் தெரு, நரசிங்கபுரம், வி.மருதூர், விழுப்புரம்.

துணைத் தலைவர் - க. அரிராமன் அத்தியூர் திருவாதி, கோலியனூர் ஒன்றியம், விழுப்புரம் வட்டம், விழுப்புரம்.

அமைப்பாளர் - எஸ். வெங்கடேசன் 171, காமராஜர் வீதி, விழுப்புரம்.

துணை அமைப்பாளர்கள் - 1) நட. ஆனந்த் 70/43, கே.கே. ரோடு, விழுப்புரம்.

2) ஜெ. ராமதாஸ் பாண்டி - திண்டிவனம் கூட்ரோடு, திருச்சிற்றம்பலம், வானூர் வட்டம், விழுப்புரம். 3) ஜி.ஆர். மோகன் கங்கையம்மன் கோயில் தெரு, கோலியனூர் மற்றும் அஞ்சல், விழுப்புரம் வட்டம், விழுப்புரம். 4) என். சூரியமூர்த்தி 62, அண்ணா தெரு, எருமணந்தாங்கல், 5வது வார்டு, விழுப்புரம். 5) கே. வெங்கடேசன் தாயுமானவர் தெரு, விழுப்புரம். 6) அ. அன்ஷர்பாட்சா கன்னியம்மன் கோயில் தெரு, சின்னகோட்டக்குப்பம், வானூர், விழுப்புரம். 7) கே. சீனுவாசன் வாணியம்பாளையம், வி. அகரம் அஞ்சல், விழுப்புரம் மாவட்டம். 8) கே. ராஜகுரு 1/34, பெருமாள் கோயில் தெரு, வி. புதூர், கண்டமங்கலம் மேற்கு ஒன்றியம், விழுப்புரம்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18.
நாள் : 12-08-2025.

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்,
**தி.மு.க. வர்த்தகர் அணி**

## தி.மு.க. இலக்கிய அணி

### மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

**தி.மு.க.இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் / பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. இலக்கிய அணியின் **விழுப்புரம் மத்திய** மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விழுப்புரம் மத்திய மாவட்டம்**

தலைவர் - ஏ. சச்சிதானந்தம் மேற்கு தெரு, சாலையாம்பாளையம் அஞ்சல், விழுப்புரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர் - பி. முத்துராமலிங்கம் 4/3, முத்தியால் தெரு, வி. மருதூர், விழுப்புரம்.

அமைப்பாளர் - துரை. மணிவேலன் 51-ஏ, முத்துமாரியம்மன் கோயில் தெரு, கிழக்கு பாண்டி ரோடு, வி. மருதூர் தெரு, விழுப்புரம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர். பிரவீன்ராஜ் 3/166, மாரியம்மன் கோயில் தெரு, சின்னக்கொங்கம்பட்டு, ராம்பாக்கம் அஞ்சல், விழுப்புரம். 2) ஆர். கிருஷ்ணமூர்த்தி அண்ணா வீதி, இராகவன்பேட்டை, விழுப்புரம். 3) வீரா. ஏழுமலை அண்ணல் அம்பேத்கர் தெரு, கண்டமானடி, விழுப்புரம் வட்டம், விழுப்புரம். 4) வே. வல்லபராசு பொம்பூர் மற்றும் அஞ்சல், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 5) எஸ். ஆறுமுகம் 22/2, மாரியம்மன் கோயில் தெரு, புளிச்சப்பள்ளம் அஞ்சல், வானூர் வட்டம், விழுப்புரம்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18.
நாள் : 12-08-2025.

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்,
**தி.மு.க. இலக்கிய அணி**



திருப்பத்தூர் தொகுதி திருப்பத்தூர் நகராட்சியில் 15000 மக்கள் பயன்பெறும் குடிநீர் விநியோகப் பணிகளுக்கு அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்.



எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99 வது வார்டுக்கு உட்பட்ட கங்காதீஸ்வரர் கோவில் நெடுஞ்சாலையில் பொதுமக்கள் வைத்த கோரிக்கையான சாலை பிரச்சனை, நேரு பூங்கா நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பில் 2025 மற்றும் 2026ஆம் ஆண்டு மாமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நடைபெற்று வரும் பணிகள், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் மழைநீர் வடிகால் தூர்வாரும் பணி, புல்லாபுரம் பகுதியில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் உள்ள சத்துணவு கூடம், மற்றும் புல்லாபுரம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் நவீன உடற்பயிற்சி கூடம் ஆகிய பணிகளை மாநகராட்சி அதிகாரிகளுடன், திமுக அயலக அணி மாநிலத் துணைச் செயலாளர் 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி ஆய்வு மேற்கொண்டார்.